| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>முருகானந்தம் | அ.வ.எண். 23/2018 | 13.11.2024 |

குறுக்கு விசாரணை

நான் சாரதாஸ் ஜவுளிக்கடையில் பணிபுரிந்து வருகிறேன். 2ம் பிரதிவாதி வாதி எனது மனைவி ஆவார், அவர் ஸ்டாப் நர்ஸாக உய்யகொண்டான் திருமலை நகர்புற சுகாதர நிலையத்தில் பணிபுரிந்துவருகிறார். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு பி அட்டவணை சொத்து கிழபுறம் வெள்ளாளர் தெரு உள்ளது. மேற்கு பகுதியில் சிறுமருதூர் சாலை உள்ளது. வழக்கு பி அட்டவணை சொத்தின் அகலம் 4 அடியும், நீளம் 86 அடியும் உள்ளது. நானும், எனது மனைவியும் 13.11.2017ம் தேதியன்று எனது சொத்தை கிரையம் பெற்றோம். எனது சொத்தை அப்பாவு பிள்ளையின் வாரிசுதாரர்களிடமிருந்து கிரையம் பெற்றேன். அப்பாவு பிள்ளை அவரது சகோதரர் ஜெகநாதன் பிள்ளை, கிருஷ்ணமூர்த்தி பிள்ளை ஆகியோர் ஒந்தாயி அம்மாள் என்பவரிடமிருந்து கிரைய ஆவணம் வா.சா.ஆ.12 மூலம் கிரையம் பெற்றார். ஒந்தாயி அம்மாள் அழகிரிசாமியிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி அழகிரிசாமி காவேரி அம்மாளிடமிருந்து கிரையம் பெற்றார். ஆதியில் எனது சொத்து காவேரி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். வாதியின் வீடு எனது வீட்டிற்கு அடுத்துள்ள வழக்கு பி அட்டவணை சொத்திற்கு தென்புறம் உள்ளது. வழக்கு பி அட்டவணை சொத்தின் வடபுறத்தில் எனது வீடு உள்ளது. வாதி வழக்கு சொத்தை குமரேசன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். வாதி வழக்கு நடத்தும் போதே இறந்து தற்போது அவரது வாரிசுகள் வழக்கு நடத்தி வரும் விவரம் எனக்கு தெரியும்.

வழக்கு பி அட்டவணை சொத்திற்கு மேற்கு மற்றும் கிழக்கு புறம் இரண்டு கதவுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு கதவு தான் வழக்கு பி அட்டவணை சொத்திற்கு சென்றுவரும் பாதை என்றால் எனது வீட்டிற்கும் அது தான் பாதையாகும். வாதி வீட்டின் கொசளை பி அட்டவணை சொத்தில் 2-1/2 அடி நீட்டி கொண்டுள்ளது என்றால் சரியல்ல, 1-1/2 அடி நீட்டி கொண்டுள்ளது. வழக்கு பி அட்டவணை சொத்தில் வாதி மழை நீர் வடிகால் அமைத்துள்ளார், ஆனால் அந்த வடிகாலை அப்பாவு பிள்ளை வாரிசுதாரர்களிடம் அனுமதி பெற்று அமைத்துள்ளார். மேற்படி அனுமதி எழுத்து பூர்வமான அனுமதியாகும். மேற்படி அனுமதிக்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது. வாதிகளின் வீடு கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்று எனக்கு தெரியாது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 25.11.2024 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.